1423

ஸ்வர்ணமணிமாலை.

மணி 4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
4 DEC 1924

மசுப்பையர்,

லைப்ரரி

பாறு.

QM
N24.
171400

" ஸ்வர்ணமணிமாலை "

இந்தச் சங்கம் சிறுவர்கள் சிறுமியர்களுக்கு ஏற்பட்டது. அடியில் எழுதியிருக்கின்ற வசனங்களை இந்தச் சங்கத்தில் சேருகின்ற ஒவ்வொருவரும் தினம் ஒருதரம் படித்து, மனதில் நினைக்க வேண்டியது.

1. ஸ்நேஹம் என்னும் கம்பியால் நம்முடைய சங்கமாகிய " ஸ்வர்ண மணிமாலை " கோக்கப்பட்டிருக்கிறது. இந்த மாலையில் நான் ஒரு மணியாவேன். இந்த மாலை உலகமுழுவதையும் சேர்த்து அணைத்துக் கொண்டிருக்கிறது. அதாவது இந்தச் சங்கம் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும்இருக்கின்றது. இந்த " ஸ்வர்ணமணிமாலையில் " ஒரு மணியாயுள்ள நான் உறுதியுள்ளவனா(ளா)கப் பிரகாசிப்பேன்.

2. அதனால் எனக்கு எதிர்ப்படும் எந்த உயிர்ப் பிராணியையும் அன்பாகவும் ஆதரவாகவும் நடத்த முயலுவேன். என்னின் மெலியாரைக் காப்பாற்றவும் அவர்க்கு உதவிபுரியவும் முயலுவேன்.

3. எப்போதும் மேன்மையான எண்ணங்களையே சிந்திக்கவும், இனிய சொற்களையே பேசவும், நல்லகாரியங்களையே செய்யவும் நான் பழகுவேன். இவ்விதம், பிறருக்கு உபகாரமாகவும் நல்லவனா(ளா)கவும் நடப்பேன்.

17140

DR. ANNIE BESANT

அன்புள்ள ஸ்வர்ணமணிகளே!

ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாள் நமக்கெல்லாம் மூத்த ஒரு சிறந்த ஸ்வர்ணமணி யாவர். அவருக்கு இப்போது 77 வயது நிரம்பி 78 ஆம் வயது நடப்பு. நம் சங்கத்தின் நான்கு வசனங்களையும் அம்மையாரன்றோ நமக்கு எழுதி அருளினவர்? ஆகையால் அவர் நம் குருவென்னலாம். அவர் 1847 ஆம் வருஷம் அக்டோபர்மீ 1உ பிறந்தாராகையால், வருஷந்தோறும் அக்டோபர் மாதத்தை நாம் புண்ணிய மாசமாகக் கொண்டாடுவோம்.

அவரும் உங்களைப் போல் சிறு ஸ்வர்ணமணியாக இருந்த போது எடுத்த அவருடைய உருவப் படம் இத்துடன் இருக்கிறது, பாருங்கள். அவர் குழந்தையாக இருந்த காலத்தில் நாமும் குழந்தைகளாக இருந்து பழகவில்லையே என்ற எண்ணம் எனக்கு உண்டாகிறது. அவர் இளம் பருவத்தில் சீமையில் ஓர் பழைய வீட்டில் வசி

த்து வந்த போதிலும், அங்கு குன்றருகே யிருந்த தோப்பிலேயே குடியாக இருப்பார். அதில் அவர் ஏறாத மரம் கிடையாது. விசாலமாய்க் கிளைத்திருந்த ஓர் மரம் அவைகளெல்லாவற்றிலும் அவருக்குப் பிரியம். அவருடைய பாவனையால் அதுவே அவருக்கு வீடாகவும் படுக்கையறையாகவும், படிப்பிடமாகவும், சாப்பிடும் மேஜையாகவும் மாறும். சாப்பாட்டுக்கு அங்குள்ள அப்பிள் பழம் முதலியவைகளைத் தாமாகப் பறித்துக் கொள்வார். இவ்வாறு மரத்தில் உட்கார்ந்து ஊசலாடிக் கொண்டிருக்கும்போதே, அங்கு நிர்ப்பயமாய்ச் சஞ்சரிக்கும் பக்ஷிகள் இக[illegible] மில்டனுடைய காவியத்திலிருந்து நூற்றுக் கணக்கான வரிகளைக் கம்பீரமான குரலெடுத்துச் சொல்லுவார். பிரஸங்கத்தில் அவர் இப்போதெவ்வளவு சாமர்த்திய சாலி என்பதைக் கவனியுங்கள். விளையும் பயிர் முளையிலே தெரியும்.

அவருடைய சிறு பிராயத்தில் மண், கல், கட்

டைகளாலான பொம்மைக்கும் உயிர் இருப்பதா கவே தான் அவருக்கெண்ணம். அந்த பொம் மையைக் குழந்தையாகப் பாவித்துக் கொண்டு அதற்கு வரும் வியாதி வேட்கைகளுக்கெல்லாம் தான் கண்ணீர் விட்டுக் கொண்டும், பொம்மைக் குழந்தைகளின் அழுகைச் சத்தத்தைக் கேட்க மாட்டால் தாம் உண்மையாகவே தலையணையில் கண் புதைத்துக் காதை யடைத்துக் கொண்டிருப் பாராம். அப்போதிருந்த அக் குழந்தைப் பரு வத்து உயிர் உணர்ச்சியினாலேயே இப்போது ஞானத்தோடு அவர் செடியிலும் கொடியிலும் மிருகத்திலும் மனிதரிடத்தும் கடவுளைக் கண்டு எல்லோருக்கும் நல்லது செய்து வருகிறார்.

அவருடைய இளமையில் தன் தாயினிடம் இருந்த சினேகம் விக்கிரக பூஜையே தான் என்றார். தாயார் எங்கு போவாரோ அங்கு தானும் போவார். தாயர் எங்கு உட்காரு வாரோ, அங்கு தானும் உட்கார வேண்டும். அவர் நின்றால் தானும் நிற்க வேண்டும். எப்

படியாவது அம்மாளுடைய உடையை யிறுகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பது தான் குறி. ஒரு சமயம் தாய் பார்த்து "நீ இவ்வாறு அம்மாளைத் தொத்திக் கொண்டே யிருந்தால் ஓர் கயிறெடுத்து உன்னை என் பாவாடையோடு சேர்த்துக் கட்டிக் கொள்ள வேண்டியது தான். அது உனக்கு இஷ்டமா? என்றார். அதற்கு "அம்மா, அம்மா, அப் படியே நன்றாய் முடிச்சுப் போட்டு விடம்மா" என்று வெகு ஆவலாய்ச் சொன்னாராம். பிறகு நமது **அன்னை வஸந்தையார்** பெரியவளான பிறகு இதைச் சொல்லிச் சொல்லி வீட்டார்கள் நகைப்பார்களாம். அப்போது அது பொறுக் காது அம்மையாருக்கு! அக்காலம் அவர் தாயா ரிடம் வைத்த அவ்வளவு அன்பையும் எப்படி இப்போது உபயோகிக்கிறார்? அவர் உலக முழுவதற்கும் ஞானத் தாயாகப் பரிந்து உழைக் கிறார். அவர் மாதிரியே நீங்களும் பெரியவர்க ளானவுடன் உலக நன்மைக்காக உழைக்கத் தரு

ணம் கிடைக்கும். அப்போது கைப்பற்றுங்கள்.

அவருடைய இளமையில் முன் சொல்லியபடி தனித்துத் தானாகவே பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் படித்துக் கொண்டும் ஆடிக்கொண்டு மிருந்தாலும், வீட்டில் எல்லோருடனும் பழகும் போது வெகு சந்தோஷமாயிருப்பார். இப்படி அவர் எதிலும் அதிவேகம் வாய்ந்தவர். அவர் சிங்காரமான கதைகளைப் படிக்க அவர் தாயார் இடங்கொடாதபடியால் அவர் பக்த விலாசம் போன்ற புண்ய கதைகளையே படித்து, தாமும் ஏன் அவ்விதம் தெய்வ சாந்நித்தியம் பெற முடியாது என்ற உற்சாகத்திலேயே மேன்மேலும் அவற்றிலேயே ஆழ்ந்து ஆனந்திப்பார். இதோடு விளையாட்டுக்களிலும் அவர் முதல் தான். காலை முழுதும் படிப்பு. மாலை முழுதும் விளையாட்டு. அவர் அணிந்த மோதிரங்களில் முதலாவது, வில் வித்தையில் நல்ல பயிற்சிக்காகப் பரிசு பெற்றதே யாகும். க்ரிக்கெட் பந்தாடுவதிலும் அதிக உத்ஸாஹம். குதிரை யேற்றமும் பழக்க முண்டு.

இளமையில் அம்மையார் இப்படிப் பலவாறான பழக்கம் பெற்றவர். தாம் எவற்றையும் செய்யக் கூடுமென்ற தைரியம் அவருக்குச் சிறு பிராயமுதலே உண்டு. அதனால் தான் பிறகு தம் வாழ்நாளில் எத்தனையோ கஷ்டநஷ்டங்களைப் போர்வீரன் போல் லக்ஷியம் செய்யாமல் ஜயமடைந்தே வந்திருக்கிறார்.

ஆகையால் ஸ்வர்ணமணிகளே! நீங்களும் உங்கள் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் அன்பு பாராட்டி, நீங்கள் செய்யும் எந்தச் சிறு காரியத்தையும் கடவுளுடைய காரியமாக எண்ணி, அழகாய்ச் செய்து முடித்து ஆனந்தமாய் எவரையும், எந்த உயிர்ப் பிராணியையும் சந்தோஷிக்கச் செய்வீரானால், நீங்களும் ஓர் காலம் அம்மையாரைப் போல் லோக குருவின் தூதராக விளங்கலாம். அழியாப் பெருமையுடைய பதவி அதைவிட வேறில்லை.

தங்கள் அன்பன்
வஸந்தானந்தன்.

பின்னுரை: நம் தேசத்து ஸ்வர்ணமணிகள் மற்ற
தேசத்து ஸ்வர்ணமணிகள் மீது பிரியமுள்ளவர்களா
யிருக்கின்றனரென்றும் அந்நாட்டிலுள்ள ஸ்வர்ணமணி
களின் செய்தியைப்பற்றி நேயர்கள் எனக்குத் தெரிவித்
தல் வேண்டுமென்றும் ஸ்ரீ வி. ஜினராஜதாஸரிடம்
நான் வெளியிட்டதை ஞாபகமாய் வைத்திருந்து, என்
வேண்டுகோளை அவர் ஆஸ்டிரேலியா தேசத்துப்
பிரமஞான பத்திரிகையில் வெளியிட்டதற்கு நாம்
மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

உலகமுழுதும் குழந்தைகளின் நன்மைக்காக நடக்கும் முயற்சிகள்.

அமெரிக்காவில் ஸ்வர்ணமணி மாலைச் சங்கம் எப்படி
ஆரம்பிக்கப் பெற்றதெனில், ஓர் பெண்மணி குழந்தை
களுக்குக் கதை சொல்வதற்கென்று ஒரு மணி நேரம்
நியமித்தனர். யார் யார் குழந்தைகளுக்குக் கதை
சொல்லப் பிரியமுண்டோ, அவர்களைக் கொண்டு சில
வாரம் நடத்தி வருகையிலேயே, வாரந்தோறும் வர்த்த
மானப் பத்திரிகைகளில் இந்த ஸல்லாபப் பழக்கத்தைப்
பற்றிப் பிரசுரித்து வந்ததில் அது மெத்த அநுகூலமாக
முடிந்தது. குழந்தைகளும் பெற்றோர்களும் சம்மதி

த்து புதிய புதிய சங்கங்கள் பிரஹ்மஜ்ஞானக் கிளைச் சபைகளில் நடந்து வருகின்றன.

"ஜூலை 5வ சனிக்கிழமை தொடங்கி பிரதி வாரமும் அத்தினத்தில் மாலை 2 மணி முதல் 4 மணி வரை மாரியன் பில்டிங் 5617 ஹாலிவுட் என்ற இடத்தில் குழந்தைகளுக்கு கதைகள் சொல்லப்படும். மிஸ் டோரதி ஓயிட், மிஸ்ஸஸ் வேண்டி, டாபின் ஹ்யூகன் முதலிய சிறுமிகள் கதைகள் சொல்வார்களாம். பிரதி வருடமும் ஜூலை 5வ மட்டும் ஓர் நல்ல தமாஷா பலரைக் கொண்டு ஏற்பாடு செய்யப்படும். ராபேர்ட் ஓயிட் என்கிறவர் கைச்சாதுரியமான ஜால வித்தையின் வேடிக்கை குழந்தைகளுக்குக் காண்பிப்பார். 'சூரத்தனத்தின் மூன்று பருவங்கள்' என்னும் கதையை ஸ்டான்லீ ரோஜர்ஸ் என்பவர் பேசுவார்".

ஓமஹா ஸ்வர்ணமணி மாலைச் சங்கத்தைப்பற்றி மிஸ்ஸஸ் லூடி ஸி. வாட்ஸன் என்னும் பெண்மணி எழுதுகிறார் :—

"என் ஸ்வர்ணமணிகளிடத்தில் எனக்கு நிரம்ப சந்தோஷம். அவர்களுக்கும் என் மீது மிகப் பிரியமே. ஓர் மேஜையைப் பீடமாக மத்தியில் வைத்து, அதன் மேல் ஒரு நார்மடியை விரித்துப் போர்த்தி, அதில்

கிறிஸ்து மூர்த்தியின் பிம்பம் ஒன்று வைத்து, இருபக் கங்களிலும் பூச்செண்டுப் பாத்திரங்களாலும் தீபங்களா லும் அலங்கரித்துச் சுற்றி எமது ஸ்வர்ணமணிகளும் நானும் ஓர் மாலையாகச் சேர்ந்து கொண்டோம். எல் லோரும் மெதுவாய் உட்கார்ந்து சற்று தியானம் செய்து பிறகு ஒருங்கே பாடினோம். பிறகு பிள்ளை களை ஆஜர் கூப்பிட்டுப் பாடந்தொடங்கினோம். கடை சியிலும் பாட்டுச் சொல்லி முடித்தோம். அதைக் குழந்தைகளுடைய சங்கமாகவே நடத்தத் தான் என க்கு விருப்பம். குழந்தைகள் தாமாகச் சொந்த யுக்தி களைச் சொல்லுமாறு உத்ஸாஹப் படுத்தினேன். தாய் மாருக்கும், மக்களுக்கும் இன்னும் சிறு குழந்தைகளுக் கும் ஓர் விருந்து சென்ற கூட்டத்தின் போது ஒரு தோட்டத்தில் நடத்தினோம். ஆனந்தகரமாயிருந்தது.

என் மூத்த குமாரன் ராஜா (அமெரிக்கக் குழந்தை க்கு ராஜாவென்று பெயர் வைத்திருப்பதைக் கவனியுங் கள்!) **கருமம், எண்ணங்களின் சக்தி** இவைகளைப் பற்றி படக்காட்சியாலும் கதையாலும் குழந்தைகளுக்கு போதித்தான்."

ரவுண்டேபிள் சங்கத்தார்:—அமெரிக்காவில் காலி போர்னியா ஸான்ஜோஸ் என்ற இடத்தில் இச் சங்கத்

தைச் சேர்ந்த சிறுவர் பிரபுக்களுக்கு உதவாத பழைய சாமான்களை யெல்லாம் வசூல் செய்து, அவைகளை ஜாப்தாஎழுதி, விளம்பரம் செய்து ஓரிடத்தில் கடை வைத்து விற்பனை செய்து காசாக்கிப் பிரஹ்மஞான சபைக்கு 100 டாலர் (ஒரு டாலர் ரூ 3½) சம்பாதித்துக் கொடுத்தனராம். (இம்மாதிரியான சாமர்த்தியம் நம் பிள்ளைகளுக்கு மெத்த அவசியம்). மேலும் எத்தனையோ ஏழைகள் புது விலைக்கு வாங்கமுடியாத சாமான்களை அரை விலைக்குப் பெறுவார்களானால் அவர்களுக்கு எவ்வளவு சந்தோஷமும் சௌகரியமும் உண்டாகும்?

லாஸ் ஆஞ்ஜிலீஸ் என்ற ஊரிலுள்ள மேற்படி சங்கத்துச் சிறுவர், ஆர்தர் அரசனைச் சேர்ந்த பழைய காலத்துச் சுத்த வீரர்களைப் போல், அருகே இயற்கையழகு மிகுந்த வனம், நதி, மலை முதலிய இடங்களுக்குத் தக்க துணைகொண்டு ஞாயிற்றுக் கிழமை தோறும் காலையில் போய்வருவதுண்டு. அவர்கள் பயந்து கொண்டிருந்த பறவை நாகம் ஒன்றும் தென்படவில்லையாம். செடிகளும் பலவாறான பிராணிகளும் தமக்குத் தம்பிமுறையிலுள்ள ஆத்மாக்கள் என்று தெரிந்து மகிழவே சாதகமாயிருந்ததாம். "இவ்வாறு வெளியேறிச் சென்று வருவதிலுள்ள உத்ஸாஹம் குழந்தை

171 400

கட்கு எதிலும் இல்லை." என ஸ்ரீ ஜார்ஜ் ஹெர்பேர்ட் ஒயிட் எழுதுகிறார்.

நம் இந்தியாவிலும் இம்மாதிரி முயற்சிகளை நம்மவர்கள் கிராமங்களிலும் பட்டணங்களிலும் செய்து வருவாராயின், நம் தேசம் அடுத்த தலைமுறைக்குள் விசேஷமான சீரும் சிறப்பும் பெறும். லோக குருவானவர் சமீப காலத்தில் அவதரித்து அவருடைய உபதேசங்களைச் செய்தால், அவைகள் வீரியத்துடன் நம் நாட்டில் நிலைபெறவும் அந்நிய நாடுகளில் தழைத்துக் கிளைக்கவும் இத்தகைய முயற்சிகளே வேண்டும்.

ஸ்வர்ணமணி மாலைக்குப் பற்பல இடங்களில் உழைப்பவர்களின் பெயர் விலாசங்களை இதில் குறித்திருக்கிறேன். அவரவர்கள் இதர ஊர்க்காரர்களோடு கலந்து கொள்ள இது சௌகரியமாயிருக்குமென்றெண்ணுகிறேன்.

மதுரை :	ஸ்ரீ ஆர். அனந்த ஐயங்கார், தியசாபிகல் சொசைட்டி, மதுரை.
காங்கயம் :	ஸ்ரீ கே.டீஸ். ராமசுப்பையர், F. T. S., காங்கயம், கோயமுத்தூர் ஜில்லா.
,,	ஸ்ரீ. எல். சுப்பிரமணிய ஐயர், பிரம ஞானசபை ஆர்கனைசர், காங்கயம், கோயம்புத்தூர் ஜில்லா.

அடையாறு : பி. எஸ். ராமசுப்பையர், அடையாற்று லைப்ரரி, தியசாபிகல் சொசைட்டி, அடையாறு, மதராஸ்.

திருப்பூர் : ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயர், பி. ஏ., எல். டி., ஹெட் மாஸ்டர், முனிசிபல் ஹைஸ்கூல், திருப்பூர்.

உதகமண்டலம் : ஸ்ரீ. எஸ். வெங்கடரமணன் c/o ஸ்ரீ வி. சுப்பராம சர்மா, ட்ரான்ஸ்லேடர், ஸப் கோர்ட்டு, உதகமண்டலம்.

கடம்பூர் : ஸ்ரீ ஆர். நாராயண ராவ், உபாத்தியாயர், கிங் ஜார்ஜ் செகண்டரி ஸ்கூல், கடம்பூர், திருநெல்வேலி ஜில்லா.

அரசூர் : ஸ்ரீ ஷண்முகசுந்தர முதலியார், அரசூர், மலையாண்டி பட்டணம் போஸ்டு, பொள்ளாச்சி தாலூகா, கோயம்புத்தூர் ஜில்லா.

வேட்டைக்காரன்புதூர் : ஸ்ரீ வி. ஏ. சாம்பசிவ முதலியார், தியசாபிகல் சொசைட்டி, வேட்டைக்காரன்புதூர், பொள்ளாச்சி.

கும்பகோணம் : மிஸ்வீல், ஸ்ரீ ஸரஸ்வதி பாடசாலை, கும்பகோணம்.

பெலிச்சினம் பாளையம் : ஸ்ரீ விசுவநாத முதலியார், கர்ணம், பெலிச்சினம் பாளையம், பொள்ளாச்சி (viâ) பொள்ளாச்சி S. I. Ry.

மாத்தூர் : ஸ்ரீ லக்ஷ்மீ ராமசந்திரன், செக்ரிடரி, கோல்டென் செயின் (ஸ்வர்ண மணி மாலை), மாத்தூர், ஆக்கூர் போஸ்டு.

,, ஸ்ரீயன். பஞ்சநத ஐயர், c/o ஸ்ரீநடேச ஐயர், மாத்தூர், ஆக்கூர் போஸ்டு.

அங்கலக்குரிச்சி : ஸ்ரீ யன். திருமலைஸ்வாமி, கர்ணம், அங்கலக்குறிச்சி, மலையாண்டி பட்டணம் (போஸ்டு) பொள்ளாச்சி தாலூகா.

திருநெல்வேலி : ஸ்ரீ கந்தஸ்வாமி பிள்ளை, டெண்டிஸ்ட், ஆப் டிஷியன் c/o ஸ்ரீ யம். வி. நெல்லையப்ப பிள்ளை, ரிடையர்ட் தாசில்தார், திருநெல்வேலிப்பாலம்.

ராஜபாளையம் : ஸ்ரீ கே. யஸ். கந்தசாமித் தேவர், அஸிஸ்டண்ட் ஸ்கௌட் மாஸ்டர்,

கொத்தன் குளம், ராஜபாளையம் போஸ்டு, ராமநாதபுரம் ஜில்லா.

புதுக்கோட்டை : ஸ்ரீ P. வேம்பு ஐயர், ஹெட் வாத்தியார், பிரைமரி செக்ஷன், ஸ்டேட் ஸெகண்டரி ஸ்கூல், ஆலங்குடி, புதுக்கோட்டை.

மேற்படி விலாசதார்கள் தங்கள் தங்கள் ஊர்களில் ஸ்வர்ணமணிமாலைச் சங்கம் நடைபெறும் முறைகளைப் பற்றி ஓர் அறிக்கைப் பத்திரம் அனுப்புவார்களாயின், அவைகளெல்லாவற்றையும் தொகுத்துப் பொதுவான அறிக்கைப்பத்திரம் ஒன்று நான் தயார் செய்து நமது டாக்டர் அன்னை வஸந்தையம்மையார் கையில் சேர்ப்பித்து, பிரஹ்மஜ்ஞானசபையின் வருஷாந்த ரிப்போர்ட்டில் பிரசுரித்தல் இலகுவாகும்.

ஸ்ரீகே. டீஸ். ராமசுப்பையா் தமது ஊரில் ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்தை நடத்தும் முறையாவது :—

"முதலில் கடவுள் வாழ்த்துச் சொல்லித் தொடங்குகிறோம். பிறகு சிற்சில பிள்ளைகள் சங்கத்தின் கருத்துக்களை ஒப்பித்து விவரிப்பார்கள். அதன் பின் பிரஹ்மஜ்ஞானசபை அங்கத்தினர் ஒருவர் ஏதாவது

ஒரு நற்குணத்தை விளக்கிக்காட்டத்தக்க உபாகியா னம் ஒன்றைச் சொல்லி முடிப்பார்."

மாத்தூர் ஸ்வர்ணமணிமாலைக் காரியதரிசியாகிய ஸ்ரீ லக்ஷ்மீராமசந்திரன் எழுதுவதாவது :—

"ஆன்றோர்களருளால் சென்ற 1923 வருஷம் மார்ச் சுமீ 12உ இவ்வூர் (மாத்தூர்) அன்பகம் வித்யாசாலைச் சிறுவர்களில் பன்னிருவர் (12) கூடி ஸ்வர்ணமணி மாலை என்ற வாலிபச் சங்கம் ஷெ வித்யாசாலைத் தலைவர் ஸ்ரீமான் P ராஜகோபால அவர்களால் ஸ்தாபிக்கப் பட்டது. ரிஜிஸ்தரில் தாகலான அங்கத்தினர்களின் சங்கியை கொஞ்சமாய் இருந்தாலும், சுமார் 20 முதல் 25 சிறுவர், சிறுமியர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் ஹாஜராகி இருந்து வந்திருக்கிறார்கள்.

இவர்களில், அதிகபக்தி, சிரத்தை, உத்ஸாஹத்து டன் உழைத்தவர்கள் 15 பேருக்குக்குறைவில்லை.

சனிவாரந்தோறும் சுமார் மாலை 3 மணிக்கு குழந்தை கள் எல்லோரும் ஒன்று கூடி ஸ்வர்ணமணிமாலையின் நான்கு வசனங்களையும் இனிமையாகப்பாடி நற் சீல மும் நல்லறிவும் உண்டாகுமாறு பகவானைப் பிரார்த்திப் பது வழக்கம். ப்ரதிவாரமும், ஸ்ரீமஹாபக்தவிஜயம், ஆர்யமத உபாக்யானம், வால்மீகி ராமாயணம், பாரதம், ஸ்ரீமத்பாகவதம் மற்றும் பல தத்வஞான ஸபை க்ரந்

தங்கள் முதலியவைகளிலிருந்து ஸுலபமும், சிலாக்
யமுமான விஷயங்களைக் குழந்தைகளைப்படிக்கச் செய்
து, இப்பால்யர் சபை அக்ராஸனர் ஸ்ரீமான் P. இரா
ஜகோபால அவர்கள் அவைகளைப் பல உபமானங்களால்
விளக்கிக்காட்டி சந்தேசமற உபதேசிப்பார்.

ப்ரதிதினமும் தேவாரம், திருவருட்பா முதலிய சில
பாக்கள் போதிக்கப்பட்டு வருகின்றன.

சென்ற வருஷத்தில் 50 மீட்டிங்குகள் நடைபெற்றி
ருக்கின்றன. தவிரவும் இடை இடையே பக்தி, மன
உறுதி, சாந்தம், அன்பு, சத்சங்கம், சஹோதரத்வம், பூத
தயை, அஹிம்ஸை, ஜகத்குருவின் வருகை, தாரகை
யின் தாற்பர்யம், என்ற அரும் பெரும் விஷயங்கள்
உபந்யஸிக்கப்பட்டன.

கண்ணன் திருவருகையை முன்னிட்டு ஸ்வர்ணமணி
களில் சிலர் காலை மாலை இருவேளைகளிலும் 6 மணிக்கு
சாந்தி ஜபம் புரிந்துவருகின்றனர். பிற்காலத்தில் ஆக்
கூர் ஸ்ரீமான்களான மகா-ள-ள-ஸ்ரீ பாலசுந்தரம்.
ஸ்ரீமான் வடிவேல் இவர்களுடைய ஊக்கத்தாலும், ஸந்
மார்க்க போதனைகள் புகட்டப்படுகின்றன.

4 இம்மாலையின் மணிகளாகிய மற்ற சிறுவர்கள் ஒவ்வொருவரும் எப்போதும் பளபளப்பும் உறுதியுமான மணிகளாயிருக்க வேண்டுமென விரும்புகிறேன், அதாவது நல்ல பிள்ளைகளாக வேண்டுமென்று விரும்புகிறேன்.

"ஸ்வர்ணமணி மாலை" என்ற சங்கம் 1895-ஸ்த்தில் அமெரிக்காவில் Mr. வால்டர்ஸ் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இவருடைய வேண்டுகோளின் பிரகாரம், இச்சங்கத்தின் லக்ஷ்யமாகிய நான்கு வசநங்களும், கியாதி பெற்ற ஸ்ரீ அன்னி பெஸன்ட் அம்மையாரால் ஆலோசித்தெழுதப்பட்டன. உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் இச்சங்கம் பரவியிருக்கின்றது; எல்லா இடங்களிலும் இச்சங்கத்தைச் சேர்ந்த ஸ்வர்ண மணிகள் பிரகாசிக்கின்றன. அதாவது இச்சங்கத்தைச் சேர்ந்த சிறுவர்கள் எல்லோரும் தாம் பழகும் உயிர்ப் பிராணிகளிடத்தும் ஜநங்களிடத்தும் அன்போடும், கருணையோடும், அமரிக்கையாகவும் நடந்து கொள்வார்கள் என்பதாம். அதனால், மற்றவர்களும் அன்பு, கருணை, அமரிக்கை என்னும் குணங்களுடன் பிரகாசிப்பார்கள். உலகத்திலுள்ள நாநாவித ஜாதியார்களான சிறுவர் சிறுமிகளுக்கு "ஸ்வர்ண மணிமாலை" ஒரு பொதுச் சங்கமாகும். இச்சங்கம் ஏற்பட்டது முதல் அநேக மணிகள் (சிறுவர்கள்) சேர்ந்து, மாலையானது (சங்கம்) இப்போது வெகு நீளமாயிருக்கிறது.

இன்னும் நாளுக்கு நாள் மணிகள் (சிறுவர்கள்) சேரச் சேர பெரிதாகியே வருகிறது. இச்சங்கத்தின் ஆதியில் சேர்ந்த சிறுவர்கள் அநேகர் இப்போது வயது ஆனவர்களாயிருக்கிறார்கள்.

இச்சங்கத்தில் சேருகின்றவர்கள் எல்லோரும் ஒவ்வொரு நாளும் காலையில் தூங்கி எழுந்தவுடன், மேலேயுள்ள நான்கு வசநங்களையும் ஒருதரம் படிக்கவேண்டும். அத்துடன், படித்தபிரகாரமே ஒவ்வொருநாளும் நடக்கவும் முயற்சிக்க வேண்டும். இது தான் சங்கத்தாரின் கடமை.

நாய், பூனை, ஆடு, மாடுகள் முதலிய பிராணிகளுக்குக் கூட இந்தச் சங்கத்தின் மெம்பர்களாகிய ஸ்வர்ணமணிகளிடத்தில் வெகு பிரியம். ஏனென்றால் ஸ்வர்ணமணிகள் அவைகளைப் பிரியமாகவே நடத்துகிறார்கள்.

இப்போது அடையாறு, ஆக்கூர், கடம்பூர், கும்பகோணம், திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் முதலிய பல இடங்களில் சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு வருடச் சந்தா 4 அணா. பத்திரிகை மாதமொன்று கிடைக்கும்.

BESANT PRESS, MADRAS